பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

சுடர்: 5 பிரமோதூத ஸ்ரீ ஆடி மீ 25 உ. சனிக்கிழமை (11-08-1990) ஹிஜ்ரி 1410 முஹர்ரம் பிறை 19 கதிர்: 161

## ★ யாழ். குடாநாட்டிலிருந்து

# தமிழகம் செல்லும் அகதிகள் எண்ணிக்கை திடீர் உயர்வு

## கண்மூடித்தனமான தாக்குதல்களை அடுத்து எழுந்துள்ள நிலைமை

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 11

**ஸ்ரீலங்கா அரச படைகள் நடத்திவரும் கண்மூடித்தனமான விமான மற்றும் ஷெல் தாக்குதல்களை அடுத்து யாழ். குடாநாட்டிலிருந்து தமிழகத்திற்கு அகதியாகச் செல்வோரின் எண்ணிக்கை திடீரென பெருமளவில் அதிகரித்திருக்கிறது.**

ஸ்ரீலங்கா விமானப்படையின்- சீனத் தயாரிப்பு- சகடை விமானம் யாழ் நகரப் பகுதியில் - பேரழிவை ஏற்படுத்தும் விதத்தில் நடத்திவரும் கொடூரத் தாக்குதலினால் மக்கள் பீதியுடன் வாழும் நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

இதனாலும் மற்றும் பொம்மர், ஷெல் தாக்குதல்களில் இருந்து தப்புவதற்காகவுமே மக்கள் அகதிகளாக இடம் பெயரத் தொடங்கியிருக்கிறார்கள்.

குடாநாட்டின் கரையோரப் பகுதிகள் பலவற்றில் தமிழகத்துக்குச் செல்வதற்காகக் காத்து நிற்போரின் எண்ணிக்கையும் பெருமளவில் அதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சவளக்கடையில் வைத்து 10 தமிழர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஆக. 11

மட்டக்களப்பு - சவளக்கடையில் வைத்து கடந்த செவ்வாயன்று 10 தமிழர்கள் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மண்டூரிலிருந்து சவளக்கடைக்கு சாமான் வாங்கச் சென்ற பத்துப்பேரே படையினரால் சுட்டுக் கொல்லப் பட்டதாகவும்—

அவர்களது சடலங்கள் எரிக்கப்பட்டு விட்டதாகவும் சொல்லப்பட்டது. [உ-5-9]

## திருக்கேதீஸ்வரம் கோயில் மடம் உடைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஆக. 11

கடந்த புதன்கிழமை தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து வாகனங்களில் மாந்தையை நோக்கிச் சென்ற இராணுவத்தினர் வழியில் திருக்கேதீஸ்வரம் கோயிலுக்கு சொந்தமான மடம் ஒன்றை உடைத்ததாகத் தெரிய வருகிறது.

அங்கிருந்த மின்சார இயந்திரம் ஒன்றை அவர்கள் எடுத்துச் சென்றதாகவும்—

வழியில் 11 வீடுகள், ஆறு கடைகள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடை ஒன்று ஆகியவற்றையும் வான் ஒன்றையும் எரித்து நாசமாக்கியதாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

## பொறி வெடியில் சிக்கி ஆறு படையினர் காயம்

கொழும்பு, ஆக. 11

பெரிய புல்லுமலைப் பகுதியில் பொறி வெடிகளை அகற்ற முயற்சித்த படையினர் ஆறு பேர் அந்த வெடிகளில் சிக்கி காயமடைந்தனர்.

தகவல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (உ-எ)

## பயணிகள் தொடர்பகத்தில் இன்று பதிவுகள் இல்லை!

### விண்ணப்ப மீள்பரிசீலனை மட்டுமே

யாழ்ப்பாணம், ஆக. 11

இன்று நல்லூர் பயணிகள் போக்குவரத்து தொடர்பகத்தில் பதிவுகள் எதுவும் மேற்கொள்ளப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பயணிகள் போக்குவரத்து தொடர்பகத்தினால் நேற்று வெளியிடப்பட்ட பத்திரிகை குறிப்பு ஒன்றிலேயே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்

(3 ஆம் பக்கம பார்க்க)

## தமிழர் கொல்லப்படுவதை ஏன் மறைக்கிறீர்கள்?

### நாடாளுமன்றத்தில் கேள்வி

கொழும்பு, ஆக. 11

சிங்களவரும் முஸ்லிம்களும் கொல்லப்படும்போது அது பற்றிய செய்திகளுக்கு அரசின் தொடர்புச் சாதனங்களும் பத்திரிகைகளும் முக்கியத்துவம் கொடுக்கின்றன. ஆனால் தமிழர்கள் கொலை செய்யப்படும்போது அது பற்றிய செய்திகளை மறைக்கிறீர்கள்.

-இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் குற்றம் சுமத்தினார் ஈ.பி.ஆர்.எல்.எவ்வை சேர்ந்த எம்.பி. திருமதி

(3ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கே மின்சாரம் வழங்க வாய்ப்பு; ஆனால் படையினர் தடையாம்!

யாழ்ப்பாணம், ஆக. 11

சுன்னாகம் மின் நிலையமும் அங்குள்ள கட்டுப்பாட்டு அறையும் சேதமுற்றாலும் குடாநாட்டின் ஒரு பகுதிக்கு மின்சாரத்தை வழங்க வாய்ப்புகள் உண்டு.

ஆனால் குடாநாட்டிற்கு மின் வழங்குவதற்கு கூட்டுப் படை தலைமையகம் அனுமதி வழங்க மறுத்து வருகிறது.

இலங்கை மின்சார சபை அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

தெற்கிலிருந்து 132 கே.வி மின் இணைப்புகளுடாக சுன்னாகம் மின் நிலையத்துக்கு வரும் மின்சாரம் அங்கு படிமுறையில் குறைக்கப்பட்டு குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கு வழங்கப்படுவதே வழக்கம்.

சுன்னாகம் மின்நிலையம்

( 3 ஆம் பக்கம் பார்க்க)

## 3 தமிழர்கள் வவுனியாவில் கொலை!

கொழும்பு, ஆக. 11

வவுனியா மாவட்டத்தில் சமன்குளம் என்னுமிடத்தில் முஸ்லிம் கோஷ்டி ஒன்று நடத்தியதாகக் கூறப்படும் தாக்குதலில் 3 தமிழர் கொல்லப்பட்டனர் என்றும்-

6 வீடுகள் தீக்கிரையாக்கப் பட்டன என்றும் ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. (உ-எ)

## சிப்பாய் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஆக, 11

முல்லைத்தீவு இராணுவ முகாமில் நேற்று முன்தினம் சென்றியில் நின்ற இராணுவம் மீது விடுதலைப் புலிகள் திணைப்பள் தாக்குதல் நடாத்தியதில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-5-9)

## கருவையும் அழிக்கும் பொல்லாக் குண்டுகள்!

யாழ்ப்பாணம், ஆக. 11

தமிழ்ப் பகுதிகளில் இடம் பெற்றுவரும் பயங்கரக் குண்டு வீச்சுகளால், இன்றைய தமிழ்ச் சந்ததியினர் மட்டும் அழிக்கப்படவில்லை.

தமிழ்த் தாய்மாரின் கருவில் இருக்கும் வருங்காலத் தமிழ்ச் சந்ததியினரும் அழிக்கப்படுகிறார்கள்!

முன்னையது நேரடி இன ஒழிப்பு, பின்னையது மறைமுக இன ஒழிப்பு.

தமிழ்ப் பகுதிகளில் போடப்படும் குண்டுகள், குடிமக்கள் வாழும் பகுதிகளில் பாவிக்க ஒவ்வாதவை. போர்க்காலங்களிலும், எல்லைப் புறங்களிலும். தாக்குதல் நடத்த உபயோகிக்கப்படுபவை.

பொம்மர், அவ்ரோ, சகடை( விமானங்கள் போடும் எடை கூடிய குண்டுகளால் கர்ப்பிணித் தாய்மார் அதிர்ச்சி, பயம் ஆகியவற்றால் ஏனையோரை விட மிகப் பெரிய அளவில் பாதிக்கப்படுகின்றனர்.

தனக்குத் தெரிந்தமட்டில் கடந்த குண்டுத் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் ஆறு கர்ப்பிணிகளுக்குக் குழந்தைகள் இறந்து பிறந்தன என்று வைத்திய அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். அதேபோல ஆறு கர்ப்பிணிகளுக்குக் கருச்சிதைவு உண்டானது எனவும் அவர் சொன்னார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து பல கர்ப்பிணிகள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## 500 தொன் மா வந்தது

திருகோணமலை பிரிமா ஆலையிலிருந்து 500 தொன் மாவுடன் ''சிகிரியா'' கப்பல் நேற்றுக்காலை பருத்தித்துறை வந்தடைந்தது.

கப்பலில் இருந்து மா இறக்கும் வேலை உடனே ஆரம்பிக்கப்பட்டது. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## இடமாற்றம்

டில்கா வாச் வேக்ஸ் (DILKA WATCH WORKS) ஸ்தாபனம் ஆனைக்கோட்டை குளப்பிட்டி வீதியில் அமைந்துள்ள தமிழ் பல்துறை சேவை ஸ்தாபனத்தில் நடைபெறுகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம். (14006)

## கிளீன் கட்

யாழ். மின்சார நிலைய வீதியில் இயங்கிவந்த கிளீன் கட் ஸ்தாபனம், பிறவுண் வீதியில் 37, சிவகுருநாதன் வீதி (நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில்) தற்போது இயங்கி வருகிறது. (C/5291)

## கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சனி, ஞாயிறு ஆங்கில வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தனிப்பட்ட முறையிலும் உங்கள் வீடுகளிலும், மாநகரசபை எல்லைக்குட்பட்டவர்களுக்கும் கற்பிக்கப்படும். தொடர்பு:- சனி, ஞாயிறு தினங்கள் அல்லது கடிதமூலம் S. ஜெயராஜா, கல்யாணி ஆங்கிலக் கல்வி நிலையம், 204, மானிப்பாய் றோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (3912)

# பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்

## யாழ்ப்பாணம்

**01. மாநகர சபை; நகர சபைகள்; பிரதேச சபைகள் அனைத்திற்கும்**

உங்கள் காரியாலயங்களில் பிறமாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்த உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் தற்போது கையொப்பமிட்டு வருகின்றனர். இவ்வூழியர்களுக்கு மாதாந்தம் ரூ. 1000/- ஐச் சம்பள முற்பணமாக வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதால் உங்கள் காரியாலயத்தில் கையொப்பமிடும் இந்த ஊழியர்களது சம்பள முற்பணத்தினை வழங்கி அத்தொகையினை எனது காரியாலயத்திலிருந்து மீளப் பெற்றுக் கொள்ளவும் மேலதிக விபரங்களுக்கு என்னுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**02. யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக ஊழியர் அனைவருக்கும்.**

எனது காரியாலய ஊழியர்கள் அனைவரும் 1990 - 08 - 13 காலை 9-30 மணிக்கு என்னை எனது காரியாலயத்தில் தவறாது சந்திக்கவும்.

சு. டிவகலாலா,
பிரதேச உள்ளூராட்சி உதவிஆணையாளர்
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம்.
1990 - 08 - 10 [சி-5162]

# கொழும்பு வர்த்தகருக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஆக. 11

கொழும்பு நகரில் வர்த்தகத்தில் ஈடுபட்டு உள்ள தமிழர்கள் இம் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் நிறுவனங்களை மூடிக் கொண்டு வெளியேறி விட வேண்டும் என்று கூறும் சுவரொட்டிகள் கொழும்பு நகரில் காணப்படுகின்றன. (இ-எ)

# பலாலி ஷெல்லினால் காயம்

குருநகர், ஆக. 11

பலாலியி இருந்து ஏவப்பட்ட ஆட்லறி ஷெல்லினால் யாழ். டேவிட் வீதியில் ஒருவர் காயம் அடைந்தார். வீடும் சேதமுற்றது. காயம அடைந்தவர் டி. கிறிஸ்டி வயது 50. [இ-51]

# கொடும்பாவி

திருநெல்வேலி, ஆக. 11

கடந்த திங்களன்று கன்னாகச் சந்தியில் ஜனாதிபதி பிரேமதாஸாவின் கொடும்பாவி எரிக்கப்பட்டது. (இ -143)

# இன்று கூட்டம் நடைபெறாது

யாழ்ப்பாணம், ஆக. 11

யாழ்-மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் நிவாரண வேலைகள் தொடர்பாக வாராவாரம் சனிக்கிழமைகளில் நடைபெறும் கூட்டம் இன்று சனிக்கிழமை செயலகத்தில் நடைபெறமாட்டாது.

அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் இதனைத் தெரிவித்தார். (இ - 3)

# முதலுதவி சிகிச்சை நிலையம்

சாவகச்சேரி, ஆக. 11

கல்வயலில் தமிழ் ஈழ விடுதலைப்புலிகளின் முதல் உதவிச் சிகிச்சை நிலையம் ஒன்றை டாக்டர் திரு. பே. எட்வேட் திறந்து வைத்தார். [இ - 31]

# பரி. பேதுரு மெதடிஸ்த ஆலயம்

ஞாயிறு திருவிருந்து ஆராதனை
நாளை காலை 7.30 மணிக்கு நடைபெறும்
இடம்: திரு. கே. பூரணம்பிள்ளை,
46. சோமசுந்நரம் அவென்யூ,
சுண்டிக்குளி,

ஆராதனையைத் தொடர்ந்து விசேஷ Quarte ly Meetin நடைபெறும்.

- முகாமைக் குரு

[14017]

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அவனியில்:
21 - 07 - 1932

அவனடியில்:
25 - 07 - 1986

திதி:
11 - 08 - 1990

## திருமதி தையல்நாயகி நடராஜா

நாலாண்டு கழிந்திடினும்
நாநிலமே அழிந்திடினும்
நீர் நடமாடும் தெய்வமம்மா
மீளவந்து அணைக்கும்வரை
எம்துயர் ஆறாதம்மா

கணவர், பிள்ளைகள்,
மருமகள், பேரப்பிள்ளை.

வி. நடராஜா
''தாய் அகம்''
வண் - வட - மேற்கு,
ஆனைக்கோட்டை. [14013]

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்:
2 - 10 - 1960

ஆண்டவன் மடியில்:
11 - 8 - 1988

## மாணிக்கம் சந்திரகுமார் B.Sc.,

அராலி மேற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலம்சென்ற பொலிஸ் அதிகாரி மாணிக்கம் அவர்களினதும் திருமதி மாணிக்கம் அவர்களினதும் அருமைப் புதல்வன்.

குடும்பத்தின் ஒளிவிளக்காயும், வழிகாட்டியாகவும் திகழ்ந்து எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எமது அன்புத் தெய்வமே, உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

உங்களின் பிரிவால் துயருறும் -

| | |
|---|---|
| மா. சிவசுப்பிரமணியம் | திருமதி மாணிக்கம் |
| மா. விக்கினேஸ்வரராசா | திரு. ஜெயக்குமார் |
| மா. வியேந்திரா | திரு. உலகநாதன் |

அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை. (13998)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
நாகமுத்து
தம்பிஐயா

தோற்றம்: 12-04-1934
மறைவு: 02-08-1988

திதி: 1990 - 08 - 18

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி,
பிள்ளைகள்,
சகோதரர்கள்,
மைத்துனர்கள்,
மைத்துனிகள்.

நாவலடி லேன்,
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம். [14014]

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வன்

## கந்தையா வேலாயுதகுமாரர்

(குமார்)

ஈழ மண்ணில்: 23 - 10 - 1965
ஈழவர் நெஞ்சில்: 23 - 07 - 1989

திதி: 11 - 08 - 1990

ஆண்டொன்று சென்றதண்ணா
ஆண்டவனிடம் நீ சென்று
ஈழத்தை மீட்கும் பணியில்
இன்னுயிரை ஈந்து செல்லும்
''புலிவீரர்கள்'' திசையினிலே
தினம் தினம் நீ நடந்தாய்
சாவினைக் கண்டு நான்
சளைத்திடவில்லை என்றாய்
சதிவலை எறிந்ததனால்
ச த்திரம் முடித்துக்கொண்டாய்

முடிந்த கதை என்றாலும்
முட்டி வழியும் விழிநீரை
முயற்சித்தும் அடக்க முடியவில்லையண்ணா
சோதனைகள் என்றும் எம் ''புலிகளுக்கு''
சாதனைகள் என்றிடுவாய்
சோகம் ஏதும் கண்டு நான்
சோர்ந்திடவில்லை என்பாய்
சோகமான உன்சேதி
சோதரிகள் நம் இதயங்களைச்
சோபித்து விட்டதையோ!

'' கடலில் அலைகள் ஓய்வதும் இல்லை
புலிகள் தோல்வி காண்பதும் இல்லை ''

குடும்பத்தினர், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

உடையார் வளவு,
மயிலணி,
சுன்னாகம். (சி-5153)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்தான்குடிச் சம்பவங்களுக்கு பழிவாங்கல்: 107 தமிழர் கொலை

## யு. என். ஐ. செய்தி குறித்து ராணுவம் மௌனம்

கொழும்பு, ஆக. 11
காத்தான்குடிக் கொலைகளுக்கு பழிவாங்கும் நடவடிக்கையாக கிழக்கு மாகாணத்தில் 107 தமிழர்கள் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கல்லாறு பகுதியில் 26 தமிழர் வரிசையாக நிறுத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அம்பாறையில் 12 தமிழர் கொல்லப்பட்டனர்.

சவளக் கடையில் 12 தமிழர் ஊர்காவல் படையினரால் கொல்லப்பட்டனர்.

யு. என். ஐ. செய்தியாளருக்கு மட்டக்களப்பில் இருந்து தொலைபேசி மூலம் அளித்த பேட்டி ஒன்றில் விடுதலைப் புலிகள் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் கரிகாலன் இவ்விவரங்களைத் தெரிவித்தார்.

காத்தான்குடி சம்பவத்துக்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் தொடர்பே கிடையாது என்றும் திரு. கரிகாலன் சொன்னார்.

கிழக்கில் தமிழர் கொலை செய்யப்பட்டனர் என்ற செய்தியை இராணுவத்தினர் உறுதிப்படுத்தவோ, மறுக்கவோ இல்லை என்றும் 'யு. என். ஐ.' தெரிவித்தது.
(இ-எ)

# குடும்பத்துக்கு ஒரு கிலோவாக பங்கீட்டு அரிசி குறைப்பு

யாழ்ப்பாணம், ஆக. 11
யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலம் குடும்பம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட 2 கிலோ அரிசி தற்போது 1 கிலோவாக குறைக்கப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலை அடுத்தே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பலநோக்குக் கூட்டுறவுப்பொது முகாமையாளர் தெரிவித்தார்'

இனி குடும்பம் ஒன்றுக்கு 1 கிலோ மா, 1 கிலோ அரிசி ஒருவருக்கு 100 கிராம் வீதம் சீனி, 3 தீப்பெட்டி என்ற அடிப்படையில் பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

## பிரார்த்தனை அபிஷேகம்

களத்தில் நிற்கும் தமிழ் ஈழ விடுதலைப்புலிகளுக்கு நல்லாசி வேண்டி வேலணை மேற்கு முடிப்பிள்ளையார் இந்து இளைஞர் மன்றத்தினால் வேலணை மேற்கு முடிப்பிள்ளையார் ஆலயத்தில் விசேட பிரார்த்தனையும், அபிஷேகமும் நடைபெற்றன.

வேலணை மேற்கு இந்து இளைஞர் மன்றத் தலைவர் செல்வன் ப. சதீஸ்குமார் தலைமையில் போர்க்கால சிந்தனைக் கூட்டமும் நடைபெற்றது.
[இ-167]

# வ.பி.போ. சபை ஊழியர்; 2 மாதச் சம்பளம் இல்லை!

யாழ்ப்பாணம், ஆக. 11
இலங்கை போக்குவரத்துச் சபை மக்கள் மயமாக்கும் திட்டம் வடக்கில் மேற்கொள்ளப்படாததால் வட பிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க அரசு பின்நிற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை வட பிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு இங்கு பஸ் சேவை மூலம் கிடைக்கும் வருமானம் போதாததால், மத்திய போக்குவரத்துசபையில் இருந்துஒரு பகுதி பணம் பெற்றே சம்பளம் வழங்கப்பட்டு வந்தது.

தற்போது இங்குபஸ்சேவை நடைபெறாததால் வருமானம் எதுவும்இல்லை.

சபையை மக்கள் மயமாக்கும் திட்டம் இங்கு செயற்படுத்தப்படாததால் சம்பளத்தை வழங்க சபை பின் நிற்கிறது.

இதனால் கடந்தஇருமாதச் சம்பளமும் இன்றி ஊழியர்கள் பெரும கஷ்டத்தை எதிர்நோக்கி உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.
(இ-10-3)

# வவுனியா நகருக்குள் செல்வோருக்குப் பாஸ்

கிளிநொச்சி, ஆக. 11
வவுனியா நகர்ப் பகுதியில் உள்ள தமது வர்த்தக ஸ்தாபனங்கள், வீடுகள் ஆகியவற்றைப் பார்வையிடச் செல்லும் பொதுமக்கள் இராணுவத்தினரிடம் பாஸ் பெற்றே செல்ல வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

வாகனங்கள் எதுவும் நகரப் பகுதிக்குள் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை என்றும் வீடுகளில் இருந்து பொருள்களை எடுத்துவர விரும்புபவர்களுக்கு இராணுவத்தினரால் கைவண்டி வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
(இ - 76)

# வேலணையில் அஞ்சலிக்கூட்டம்

வேலணை, ஆக. 11
யாழ். கோட்டை முகாமை கைப்பற்றுவதற்காகச்சென்று வீரமரணமடைந்த 27 வீர வேங்கைகளுக்கு அஞ்சலி தெரிவித்து வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் கடந்த செவ்வாயன்று கூட்டம் ஒன்று நடைபெற்றது.

தீவுப்பகுதி வட்டசபைத் தலைவர் திரு. சி. கார்த்திகேசு கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

தீவுப்பகுதி அரசியல் பொறுப்பாளர் திரு. நரேஸ் மகளிர் படைத் தலைவி சோபிகா, வேலணை 2 ஆம் வட்டார சிற்றூரவைத் தலைவர் திரு ச. மாணிக்கவாசகர், புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. கனகலிங்கம் உட்பட பல பிரமுகர்கள் கூட்டத்தில் உரையாற்றினார்கள்.

வேலணை 3 ஆம் வட்டார சிற்றூரவைத் தலைவர் திரு. த. குமாரசாமி நன்றியுரை வழங்கினார்.
(இ-167)

# குவைத்தை இணைக்கும் ஈராக் பிரகடனம் செல்லுபடியாகாது

## ஐ. நா. பாதுகாப்புச் சபை அறிவிப்பு

ஐ நா. ஆக. 11
குவைத்தை தன்னுடன் இணைத்துக் கொண்டதாக ஈராக் வெளியிட்ட பிரகடனம் செல்லுபடியாகாது என்று ஐ. நா. பாதுகாப்புச் சபை நேற்று அறிவித்தது.

ஈராக்கின் இச்செயலைக் கண்டித்து ஐ. நா. பாதுகாப்புச்சபை ஏகமனதாகத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

இதனிடையில் அமெரிக்கா வளைகுடாவில் தனது படைப்பலத்தை மேலும் பெருக்கி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை ஒரு லட்சத்து 20 ஆயிரம் கடற்படை வீரர்களையும் எப் - 16 ரக நவீன போர் விமானங்களையும் அமெரிக்கா வளைகுடா பிரதேசத்தில் குவித்து வைத்துள்ளது.

பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளும் வளைகுடாவில் தங்கள் இராணுவ பலத்தை அதிகரித்துள்ளன.
(இ - எ)

## வடக்கே மின்சாரம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
சேதமுற்றதால் இந்த 132 கே.வி. மின் இணைப்பூடாக மின்சாரத்தைப் பெறுவது சாத்தியமல்ல.

ஆனால் வடக்கிற்கு வரும் மற்றொரு -33 கே. வி. மின் இணைப்பூடாக - மின்சாரத்தைப் பெறுவதற்கு வாய்ப்புண்டு.

இந்த இணைப்பூடாக நீர் மின்சாரம் தெற்கிலிருந்து விநியோகிக்கப்பட்டால் அதனை குடாநாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் பங்கீட்டு முறையில் ஓரளவு வழங்க முடியும்.

இந்த இணைப்பூடாககுடாநாட்டிற்குத் தேவையான மின்சாரத்தின் ஆறில் ஒரு பகுதியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆனால் இந்த இணைப்பூடாக மின்சாரத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்க மறுத்து வருகிறதாம்.

தங்களது இராணுவ நடவடிக்கைகள் முடியும் வரை மின் விநியோகம் வழங்க வேண்டாம் என கூட்டுத் தலைமையகம் இலங்கை மின்சாரசபையின் தலைமையகத்துக்கு உத்தரவிட்டிருக்கிறது.

இதனால் குடாநாட்டிற்கு மின்சாரத்தை பெற வாய்ப்பு இருந்தும் அதைப் பெற முடியாதிருக்கின்றது.

இவ்வாறு அந்த மின்சார சபை அதிகாரி மேலும் தெரிவித்தார்.
[உ-9]

# சாவகச்சேரிப் பகுதியில் ஹெலிதாக்குதல் தீவிரம்

சாவகச்சேரி, ஆக. 11
செவ்வாய்க்கிழமை காலையும், மாலையும் சாவகச்சேரி சந்தைப்பகுதியில் இடம்பெற்ற ஹெலித்தாக்குதலில் தேங்காய்க் கடையில் ஒருவர் மரணமானார். பத்துக்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

அதே சமயம் திங்கட்கிழமை மட்டுவில் - புத்தூர் வீதியில் இடம்பெற்ற ஹெலித்தாக்குதலில் வண்ணாத்திப் பாலப் பகுதியில் சைக்கிளில் சென்ற இருவர் காயம் அடைந்தனர்.

## துக்கதினம் அனுஷ்டிப்பு

சாவகச்சேரி, ஆக.11
ஆனையிறவில் எதிர்பாராத வெடிவிபத்தில் மரணமான மீசாலையைச் சேர்ந்த வீர வேங்கை பரணியின் மரணத்தை ஒட்டி துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இராணுவ மரியாதையுடன் பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு சாவகச்சேரி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.
[இ-31]

# இளிநொச்சி தொடர்ந்து ஸ்தம்பித நிலையில்

கிளிநொச்சியில் அரச அலுவலகங்கள் தொடர்ந்து ஸ்தம்பித நிலையில் இருந்து வருகின்றன.

அரச அலுவலகங்கள் இராணுவ நடவடிக்கைகளின் போது சேதமடைந்துள்ளதால் அவை இயங்குவதில்லை.

வங்கிகள் தொடர்ந்தும் மூடப்பட்ட நிலையில் உள்ளன.

தபாற்கந்தோர் சேதம் அடைந்துள்ளதால் உள்ளூர் தபால் சேவை நடைபெறுவதில்லை.
(இ - 76)

## சத்தியாக்கிரகம் கைவிடப்பட்டது

கொழும்பு, ஆக.11
காத்தான்குடி படுகொலைகளைக் கண்டித்து காலிமுகத்திடலில் முஸ்லிம் மக்கள் நடத்தவிருந்த சத்தியாக்கிரகமும் கொழும்பு மாநகரில் நடத்தப்படவிருந்த கடையடைப்பும் கைவிடப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.
[இ-எ[

## தமிழர் கொல்ல...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பிரேமச்சந்திரன்,

இக்குற்றச்சாட்டை சுதந்திரக் கட்சி எம்.பியான திரு. அநுரா பண்டாரநாயக்காவும் வலியுறுத்தினார்.

''தற்போது வடக்கு-கிழக்கு பகுதியில் நடைபெற்றுவரும் சண்டையில் சுமார் ஆயிரம் தமிழர் படுகொலை செய்யப்பட்டனர். ஆனால் அது பற்றிய செய்திகள் மறைக்கப்பட்டிருக்கின்றன'' என்றார் திரு. பிரேமச்சந்திரன்.

நிந்தவூர்க் கிராமத்தில் இந்துக் கோயிலில் வைத்து தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்றும்-

அப்பகுதியில் இராணுவம் அப்பாவித் தமிழர் 27 பேரை கொன்றது என்றும் சொன்னார்.

திருமலை மாவட்டத்தில் தமிழரின் வீடுகளை இராணுவம் கொள்ளை அடித்தது என்றும்-

பொலன்நறுவை மாவட்டத்தில் இராணுவம் பிடித்துச்சென்ற 18 தமிழரின் கதி தெரியவில்லை என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி மாவை சேனாதிராசா பேசுகையில் குறிப்பிட்டார்.

கொழும்பில் வாகனங்களில் வந்த 200 தமிழர்களை இராணுவம் பிடித்துக்கொண்டு போய் சிறையில் அடைத்துள்ளது என்றும் திரு. மாவை சேனாதிராசா குறிப்பிட்டார்.
[உ-எ]

# யாழ். நகர வானம் நேற்றுச் சிறிது வெளிச்சம்

யாழ்ப்பாண நகரத்தில் நேற்றுக் காலையும் நண்பகலும்வெளித்திருந்தன! வானம் மட்டுமல்ல; வானத் தாக்குதலும்தான்!!

விமானக்காரருக்கு நேற்று ஓய்வு நாளாக இருக்குமோ என்று நகரத்துமக்கள்நினைத்துக் கொண்டிருந்த வேளை-

பிற்பகல் சுமார் 2 15 மணியளவில், முதல் 'றவுண்ட' கடமைக்கு இரண்டு அவ்ரோக்கள் வந்தன. கோட்டைப் பகுதியைச் சுற்றி சுழன்று பொதிகளைப் போட்டுவிட்டுச்சென்றன.

பின்னர் மூன்றுமணியளவில் இரண்டு அவ்ரோக்களும், 2 பொம்மர்களும் இரண்டாம் 'றவுண்ட்' வந்தன.

அவை பொதிகளையும், குண்டுகளையும் மாறி மாறிப் போட்ட பின்னர் சுமார் 3 45 மணியளவில்சென்றன. பொம்மர் ஒன்று ரொக்கட் தாக்குதலும் நடத்தியது.

மூன்றாம் 'றவுண்டில்' ஒரு ஹெலி வந்தது, நீண்ட நேரம் வினைகெடாது சில இடங்களில் வேட்டுக்களைத் தீர்த்து விட்டுச் சென்றது.

மாலை சுமார் 6மணியளவில் மீண்டும் 2 பொம்மர்கள் நான்காவது 'றவுண்டில்' வந்து நகரின் மேல் நர்த்தனம் புரிந்தன.

## அடுத்த ஆண்டு மொழி திறமைப்பரீட்சை

கொழும்பு, ஆக. 11
ஐந்தாம் வருட மாணவர்கள் இரண்டாவது, மூன்றாவது மொழிகளில் பெற்றுள்ள திறமையை மதிப்பிடும் பரீட்சையை 1991 இல் இருந்து நடத்துவது என்று கல்வி அமைச்சு தீர்மானித்து உள்ளது.
(இ - எ)

## பயணிகள்...

ளது.

அனுமதிப் பத்திரங்களுக்கு விண்ணப்பித்து இதுவரை அவை வழங்கப்படாதவர்களின் விண்ணப்பங்கள் மட்டுமேஇன்றுமீள்பரிசீலனை செய்யப்படும் என்றும் —

இந்த மீள்பரிசீலனைக்குத் தோற்றாதோர் அனைவரினதும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்றும் —

அவர்கள் பயணம் செய்வதற்கு மீண்டும் புதிதாக விண்ணப்பிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அந்தப் பத்துரிகை குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.
[உ-9]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மா விநியோகம் தடங்கல்

யாழ்ப்பாணம், ஆக, 11

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு ஒதுக்கப்பட்ட 115 மூடை மாவை ஏற்றுவதற்கு உடுப்பிட்டி சென்ற லொறிகள் யாழ்ப்பாணத்தில் பரவலாக நடைபெற்ற விமானத் தாக்குதல்கள் காரணமாக யாழ்ப்பாணத்துக்கு திரும்பிவந்து சேரவில்லை.

இதன் காரணமாக நேற்று ப.நோ.கூ.ச. கிளைகள் மூலம் மா விநியோகிக்கப்படவில்லை.

லொறிகள் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்ததும் - ஓரிரு தினங்களில் - மா விநியோகம் ஆரம்பமாகும் என தெரிவிக்கப்படுகிறது (இ-10)

# ஆஸ்திரேலியா பிரதிநிதி கொழும்பில் பேச்சு!

கொழும்பு, ஆக, 11

ஆஸ்திரேலிய வெளியுறவு, வர்த்தக அமைச்சர் செனட்டர் ஈவான்ஸ் நேற்றுக் காலை ஜனாதிபதி பிரேமதாஸாவைச் சந்தித்து இரு தரப்பு உறவுகள் குறித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

திரு. பிரேமதாஸாவுடன் வெளியுறவுச் செயலாளர் பேர்னாட் திலகரத்தினா, சர்வதேச ஆலோசகர் பிராட்மன் வீரக்கோன் ஆகியோரும் பேச்சுக்களில் கலந்துகொண்டனர்.

இதற்கு முன்னர் வெளியுறவு அமைச்சர் ஹறோல்ட் ஹெரத்தை செனட்டர் ஈவான் சந்தித்துப் பேசினார்.

இரு நாடுகளின் வணிக ரீதியான உறவுகள் குறித்து செனட்டர் ஈவான்ஸ், வர்த்தக, வணிக அமைச்சர் ஏ. ஆர். எம். மன்சூரையும் சந்தித்துப் பேசினார்.

நேற்று மாலை எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை செனட்டர் ஈவான்ஸ் சந்தித்துப் பேசுவதாக இருந்தது. (உ-எ)

# தமிழகத்தில் 65 ஆயிரம் அகதிகள்

சென்னை, ஆக.11

கடந்த வியாழக்கிழமை வரை தமிழகம் சென்ற இலங்கைத் தமிழ் அகதிகளின் எண்ணிக்கை 65 ஆயிரத்தைத் தாண்டிவிட்டது என்று சென்னையில் தெரிவிக்கப்பட்டது. [இ-எ]

# ஹெலி சூடு! இருவர் காயம்

திருநெல்வேலி, ஆக. 11

குப்பிளான் சந்தியில் வியாழனன்று ஹெலி வேட்டுக்களுக்கு இலக்காகி இருவர் காயமடைந்தனர்.

கட்டுவனைச் சேர்ந்த முருகானந்தம் (28 வயது), லிங்கம் (24 வயது) ஆகியோரே அந்த இருவரும் ஆவர்.

இந்தச் சூட்டுச் சம்பவத்தில் குப்பிளான் விக்கினேஸ்வராப் பாடசாலையும் சிறு சேதத்திற்குள்ளானதாகவும் தெரிய வருகிறது. (ஒ-143)

# மேஜர் ஜேம்ஸ் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆக. 11

அச்சுவேலிப் பகுதியில் இடம்பெற்ற எதிர்பாராத சம்பவம் ஒன்றில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் ஒருவரும், போராளி ஒருவரும் வீரமரணமடைந்தனர்.

இறந்தவர் மேஜர் ஜேம்ஸ் (உருத்திராபதி - ஸ்ரீதரன் வல்வெட்டித்துறை) என்ற முக்கிய உறுப்பினராவார்.

இவர் முன்னர் வடமராட்சி பகுதியிலும், தீவுப் பகுதிகளிலும் விடுதலைப் புலிகளின் பொறுப்பாளராகக் கடமையாற்றியவர்.

இவருடன் இளம்புலி ஞானம் (ஜயாத்துரை கோபாலகிருஷ்ணன் - அச்செழு) என்ற போராளியும் மரணமானார். (உ-5-9)

# பெண் புலி வீர மரணம்

யாழ்ப்பாணம், ஆக. 11

கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்ற காரைநகர்கடற்படையினருடனான மோதலில்காயமடைந்த விடுதலைப் புலிகள் இயக்கப் பெண் போராளி ஒருவர் நேற்று முன்தினம் (வியாழன்)வீர மரணமடைந்து விட்டார்.

முல்லைத்தீவுவண்ணான்குளத்தைச் சேர்ந்த வசந்தா (மஞ்சுளா அந்தோனிப்பிள்ளை- வயது 18) என்பவரே அந்தப் பெண் போராளி ஆவார், (ஒ)

# மாலைதீவுக்கு

கொழும்பு. ஆக 11

அனைத்துக் கட்சி நாடாளுமன்றக்குழு இன்று மாலைதீவு செல்கிறது.

வடக்கு—கிழக்கு நிலைமை பற்றி சார்க் நாடுகளுக்கு விளக்கம் அளிக்கும் பயணத்தின் இரண்டாவது கட்டமாக இவ்விஜயம் அமைகின்றது எனக் கூறப்பட்டது.

# தமிழகம்- -

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கரித்திருப்பதாக அப்பகுதிகளைச் சேர்ந்த செய்தியாளர்களின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை—

தமிழகத்துக்கு வரும் ஈழத் தமிழ் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பது இந்தியாவுக்குப் பெரும் கவலையை ஏற்படுத்தி இருப்பதாக இலங்கைக்கான இந்தியத் தூதர் என். எம். ஜா தெரிவித்திருக்கிறார். [உ]

# கருவையும்- -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெயர்ந்து விட்டதால் சரியான கணக்கெடுப்பு நடத்தும் பட்சத்தில் குண்டுத் தாக்கத் [illegible] பாதிக்கப்படும் கர்ப்பிணிகளின் வீதம் கூடுதலாக இருக்க வாய்ப்புண்டு என்று அவர் அச்சம் தெரிவித்தார். (அ-10)

# சர்வதேச அமைப்புகளுக்கு யாழ். நிலை பற்றி விளக்கம்

யாழ்ப்பாணம், ஆக. 11

யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெறும் சம்பவங்கள் குறித்து கொழும்பில் உள்ள சர்வதேச அமைப்புகளுக்கும், தூதரகங்களுக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற தென்னிந்திய திருச்சபை பிரதிநிதிகள் விளக்கம் கொடுத்து வருவதாகத்தெரிய வருகிறது.

கொழும்பில் உள்ள கனடா தூதரகம், செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழு, ஒக்ஸ்பாம், சர்வதேசசெஞ்சிலுவைச்சங்கம் ஆகிய அமைப்புகளுக்கும் பாப்பரசரின் பிரதிநிதிக்கும் திருச்சபை அதிகாரிகள் நேரடியாக விளக்கம் அளித்துவருகின்றனர்.

யாழ்ப்பாணத்தின் உண்மை நிலையை இந்த அமைப்புகள் உன்னிப்பாகக் கேட்டறிந்ததாக திருச்சபை பிரதிநிதி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (உ-3)

# பயணிகளை ஏற்றும் கப்பல் இப்போதைக்கு வராது!

யாழ்ப்பாணம், ஆக.11

யாழ்ப்பாணத்தில் இருந்து பயணிகளை ஏற்றிச் செல்வதற்காக வர இருந்த ''லங்கா சிறி'' கப்பல் இங்கு வரமாட்டாது என இப்போது அறிவிக்கப் பட்டிருக்கிறது.

அரச அதிபர் திரு அன்ரன் அல்பிரட் இத்தகவலை நேற்று வெளியிட்டார்.

நேற்றுக்காலை கொழும்பில் உள்ள அத்தியாவசிய சேவைகள் பணிப்பாளர் திரு. தேவநேசன் நேசையாவுடன் தொடர்பு கொண்ட பின்னர் அவர் இத்தகவலை வெளியிட்டார் .

கப்பல் வந்து தரித்து நிற்பதற்கும், பயணிகளை ஏற்றி இறக்குவதற்குமான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்ததை அடுத்தே பயணிகளை கப்பலில் அனுப்பும் முயற்சி கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# சிறிமாவைச் சந்தித்த 6 தமிழ்க் குழுக்கள்

கொழும்பு, ஆக. 11

ஆறு தமிழ்க் குழுக்களின் பிரதிநிதிகள் கடந்த வியாழக்கிழமை எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவே பண்டாரநாயக்காவை சந்தித்து தமிழ் மக்களின் அபிலாஷைகள் பற்றிய தங்கள் பொதுக் கருத்தைத் தெரிவித்தனர்.

மேலும் ஒன்று பட்ட இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழிமுறைகள் பற்றியும் அவர்கள் திருமதி பண்டாரநாயக்காவுடன் பேசினர்.

ஈ. பி. டி- பி, புளொட், தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. என். டி. எல். எப்., ஈ.பி. ஆர். எல். எவ், ரெலோ ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகள் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். [அ,எ]

# அகதிகளுக்கு கனடா உதவி

யாழ்ப்பாணம், ஆக- 11

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் அகதிகளாக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க கனடா அரசாங்கம் ஆறுகோடி ரூபாவை வழங்கியுள்ளது.

இந்த உதவித்தொகையை கொழும்பில் உள்ள கனேடிய தூதரகம்தொண்டர்அமைப்பு ஒன்றின் ஊடாக வழங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# மரண அறிவித்தல்கள்

## கதிர்காமர் சபாபதிப்பிள்ளை

உரும்பிராய், கதிர்காமர் சபாபதிப்பிள்ளை காலமானார். இவர் சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும்; சிவபதி (லண்டன்), சிவகுமார் (லண்டன்), பவானி (அவுஸ்திரேலியா), ஜானகி, நளினி, வ:தனி ஆகியோரின் அன்புத் தந்தையும், திருத்தணீஸ்வரன், இரங்கநாதன், தர்மநாதன், சந்திரமோகன், ஆராமுதம், சிவகுமாரி ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று காலை 10 - 00 மணிக்கு நடைபெற்று, தகனக் கிரியைகள் உரும்பிராய் வேம்பயன் மயானத்தில் நடைபெறும்,

தகவல்:-

திருமதி சிவபாக்கியம் சபாபதிப்பிள்ளை

''சிவபதி''

உரும்பிராய் தெற்கு,

உரும்பிராய். [14016]

## மா. சுமதி (மாதங்கி)

வராத்துப்பளை, பருத்தித்துறையைச் சேர்ந்த மாணிக்கம், சின்னமணி தம்பதிகளின் அருமை மகள் சுமதி (மாதங்கி) 05 - 08 - 1990 இல் வீரமரணமடைந்தார்.

இவர் உதயசங்கர் (குவைத்), ஜெய்சங்கர், விஜிதா, கிரிதரன், ஆகியோரின் அன்புச் சகோதரி ஆவார். இவ்வறிவித்தலை நண்பரும். உறவினரும், ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:

குடும்பத்தினர்

மல்லிகா நாராயணன் [ஆசிரியை]

வராத்துப்பளை,

பருத்தித்துறை.

[14018]

## திரு. அ. மனுவேற்பிள்ளை

[கரம்பன்]

திரு. அந்தோனிப்பிள்ளை மனுவேற்பிள்ளை [கரம்பன்] 10-08-1990 இல் காலமானார்.

இவர் திரேசாவின் அன்புக் கணவரும், நாதன் [திருமலை], செல்வி றீற்றா [ஜேர்மன்], அருள்திரு. கிறிஸ்ரி [திருமலை], திருமதி அனற் [பிரான்ஸ்], செல்வி குணம், திருமதி கனகி [பிரான்ஸ்], குலேந்திரன் [பிரான்ஸ்], வரேந்திரன் [ஜேர்மன்] ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், திரு. அந்தோனிப்பிள்ளை [நீர்கொழும்பு புகையிரத நிலைய அதிபர்], திரு. கனகலிங்கம் [பிரான்ஸ்], திருமதி இந்திரா [பிரான்ஸ்] ஆகியோரின் மாமனாரும், காலம்சென்ற திருமதி புலகேரியா சவிரிமுத்து, காலம்சென்ற திரு. சூசைப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும், திரு. பஸ்தியாம்பிள்ளை, திரு. அத்தனாசியார், காலம்சென்ற திரு. அம்புறோஸ் ஆகியோரின் மைத்துனரும், மொய்றா, ஐறா, ஜோன், செல்வி தனுஜா [பிரான்ஸ்], ஜெனி [பிரான்ஸ்], லிவ்லின், இவ்லின், சிற்றியா, றூபி, ரெனி, பேர்னோ, சுர்னோ, வேஜினி [பிரானஸ்], மார்க், எனிக் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக 11-08-1990 சனிக்கிழமை காலை 8-30 மணியளவில் புனித யுவானியார் ஆலயத் திருப்பலியின் பின் பேராலய சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:

திருமதி திரேசம்மா மனுவேற்பிள்ளை

14/1, கோவில் வீதி,

யாழ்ப்பாணம். ( 13641)

# மரண அறிவித்தல்கள்

## திரு. யோகேஸ்வரன்

நவுக்கிரியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், வர்த்தலை விளானை வசிப்பிடமாகக் கொண்டவருமான திரு. யோகேஸ்வரன் அவர்கள் 09-08-1990 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், கோகுலன், இரகுலன், வாசினி ஆகியோரின் பிரிய தந்தையும், இ. சோமசுந்தரம் (இளைப்பாறிய பிறிசின் காட்), சரஸ்வதி ஆகியோரின் அருமைப் புதல்வனும், வர்த்தலை விளான் பொ. கனகரத்தினம் (இளைப்பாறிய பிறிசின் காட்), சிவபாக்கியம் (கனடா) ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று (10-08-90) நவுக்கிரியில் நடைபெற்றது என்பதைத் தயவுடன் உற்றார், உறவினருக்குத் தெரிவிக்கின்றோம்.

நவக்கிரி,

புத்தூர். [13630]

தகவல்:

மனைவி, பிள்ளைகள்

## பொன்னுச்சாமி அமிர்தலிங்கப் [ஐயா]

மானிப்பாய் வடக்கைச் சேர்ந்த பொன்னுச்சாமி அமிர்தலிங்கம் 9-8-90 வியாழக்கிழமை அன்று காலை காலமானார். இவர் இரத்தினம்மாவின் அன்புக் கணவரும், இராஜேஸ்வரி, கணேசலிங்கம், ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற மனோகரன், குகதர்சினி ஆகியோரின் மாமனாரும், நிர்மலன், நிரஞ்சனா, நிருபன், கருணாகரன், றாச்கரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் 9-8-90 வியாழக்கிழமை 4 மணியளவில் தகனம் செல்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

க. தர்மராசா

ஆஸ்பத்திரி ஒழுங்கை,

மானிப்பாய். [14010]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 11-08-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org